# <u>கம்பம் நகராட்சி</u>

**2018–ஆம் ஆண்டு மே மாதம் ஆம் நாள் (30.05.2018) வியாழக் கிழமை பிற்பகல் 04.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

## <u>கூட்டப் பொருட்கள்</u>

| | |
|---|---|
| **1.** | நகராட்சி ஆணையாளர் அவர்களின் 4/2018–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது |
| | **அலுவலகக் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். |
| **2.** | நகராட்சி பொறியாளர் அவர்களின் 4/2018–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். |
| **3.** | தமிழ்நாடு அரசிதழ் எண். 33 நாள் 25.01.2018இல் வெளியிடப்பட்ட சட்டத்திருத்தங்களின்படியும், நகர்மன்றத் தீர்மானம் எண்.1463, நாள்.28.03.2018இல் அனுமதிக்கப் பட்டுள்ளபடியும், இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தனியார் பள்ளிகள் மற்றும் அரசின் உதவி பெற்று நடத்தப்படும் கல்வி நிறுவனங்களில் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவனங்களுக்கு 01.10.2017 முதல் சொத்துவரிவிதிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டு பொதுமக்கள் அறியும் வகையில், அலுவலக விளம்பரபலகை மற்றும் தேனி மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வாயிலாக மாவட்ட அளவிலான தினமணி தமிழ் நாளிதழில் நாள் 20.04.2018 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது. இவ்வறிவிப்பின் மீது ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் இருப்பின் அதனை 30 நாட்களுக்குள் எழுத்து மூலமாக ஆணையர், கம்பம் நகராட்சிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டது. மேற்படி அறிவிப்பு வெளியிடப்பட்டு 30 தினங்களுக்கு மேலாகியும் மேற்கண்ட நிறுவனங்களிடமிருந்து எவ்வித ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசணைகள் வரப்பெறவில்லை. எனவே நகர எல்லைக்குட்பட்ட தனியார் பள்ளிகள் மற்றும் அரசின் உதவி பெற்று நடத்தப்படும் கல்வி நிறுவனங்களில் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவனங்களுக்கு 2017–18 இரண்டாம் அரையாண்டு முதல் சொத்துவரிவிதிப்பு நிர்ணயம் செய்யவும் அதற்கான அறிவிப்பினை மாவட்ட அரசிதழில் வெளியிட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு** : 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மாவட்ட அரசிதழில் வெளியிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/–க்கு மன்றம் அனுமதிக்கலாம். |

**4.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண். 12503/2018/ஆர்–1, நாள்:21.05.2018–ஆம் தேதிய சுற்றறிக்கையின்படி, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தொழில் நிறுவனங்கள் மற்றும் ஊழியர்கள், அரசுத்துறை மற்றும் அரசு சார்பு துறை பணியாளர்களிடம் தற்போது வசூல் செய்யப்பட்டு வரும் தொழில்வரித் தொகையில் 25% முதல் 35% மிகாமலும், அரையாண்டுக்கான தொழில்வரித் தொகை ரூ.1250/– மிகாமல் 01.10.2018 (2018–2019 II) முதல் உயர்வு செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நகராட்சியில் ஏற்கனவே வசூல் செய்யப்பட்டு வரும் தொழில்வரி தொகையில் 30% உயர்வு செய்து வசூலிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | அரையாண்டு வருவாய் | தற்போது வசூல் செய்யப்படும் தொகை | சீராய்வு செய்யப்படும் சதவிகிதம் | சீராய்வு செய்யப்படும் தொகை |
|---|---|---|---|---|
| 1 | ரூ.21000/– வரை | இல்லை | – | – |
| 2 | ரூ.21001/– முதல் 30000/– வரை | ரூ.130/– | 30% | 169.00 |
| 3 | ரூ.3000/– முதல் 45000/– வரை | ரூ.310/– | 30% | 403.00 |
| 4 | ரூ.45001/– முதல் 60000/– வரை | ரூ.620/– | 30% | 806.00 |
| 5 | ரூ.60001/– முதல் 75000/– வரை | ரூ.930/– | 30% | 1209.00 |
| 6 | ரூ.75001/– முதல் அதற்கு மேல் | ரூ.1220/– | (Not exceed Rs,1250/- Half year) | 1250.00 |

**அலுவலகக்குறிப்பு** : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அட்டவணையில் வரிசை எண் 6ல் கண்ட இனத்திற்கு மட்டும் சுற்றறிக்கையின் படி ரூ. 1250/– மேல் உயர்வு செய்ய இயலாத காரணத்தால் மேற்படி வருவாய் இனத்திற்கு உட்பட்ட வகைக்கு மட்டும் ரூ. 30/– உயர்வு செய்து வசூல் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**5.** இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.8, செக்கடித்தெருவில் உள்ள கடையினை மாதவாடகை அடிப்படையில் குத்தகைக்கு விடும் உரிமத்திற்கான பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி 04.05.2018 அன்று கோரப்பட்டது. இதில் ஏல முன்பணம் செலுத்தி பொது ஏலத்தில் கலந்து கொள்ள யாரும் முன்வரவில்லை. ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் ஒப்பந்தப்புள்ளி முன்பணம் செலுத்தி வரப்பெற்றது.

| **வ. எண்** | **பெயர்** | **மாதவாடகை** | |
|---|---|---|---|
| 1) | எம்.டி. (தனி) 108 கம்பம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிமிடெட், கம்பம் மெட்டு ரோடு, கம்பம். | 2480/– | உயர்ந்த பட்ச மாதவாடகை |

மேற்படி கூட்டுறவு சங்கத்தால் அரசு நியாயவிலைக்கடை அமைத்திட குத்தகை விதிமுறைகளுக்குட்பட்டு மாதவாடகை ரூ.2480/–க்கு சம்மதம் தெரிவித்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மேற்படி கடையானது அரசு நிர்ணயத் தொகையினை காட்டிலும் கூடுதலாகவும், மாதவாடகை ரூ. **2480/–**க்கு கேட்கப்பட்டுள்ளது. இக்கடையினை பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள யாரும் முன்வராத காரணத்தினாலும், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அரசு நியாயவிலைக்கடை நடத்துவதற்கு கோரப்பட்டுள்ளதால், நிதியிழப்பு ஏதுமில்லாத காரணத்தினால் அரசு சார்பு நிறுவனமான எம்.டி. (தனி) **108** தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் வழங்கும் சங்கம் கம்பம் அவர்களின் உயர்ந்தபட்ச மாத வாடகை தொகையினை மன்றம் ஏற்கலாம்.

2) அவசரஅவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி முன்அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கிகரிக்கலாம்.

(ந.க.எண். 3207/2018/பி2)

**6.** இந்நகராட்சியில் பொதுப்பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு நகல் பெறுக்கி (Ricoh ஜெராக்ஸ்) இயந்திரங்களுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் Ricoh Toner தீரும் நிலையில் உள்ளதால் 2018–2019–ம் ஆண்டிற்கு புதிதாக 20 டோனர்கள் மற்றும் ஜெராக்ஸ் இயந்திரத்தில் சேதமடைந்த உதிரி பாகங்களை Ricoh நிறுவனத்தின் அங்கிகாரம் பெற்ற மதுரை, திருப்பதி ஆபிஸ் புராடக்ட்ஸ் நிறுவனம் மூலம் வாங்கிடவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000/–க்கு (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1632/2016/இ1)

| | |
|---|---|
| 7. | இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 1470, நாள்.28.03.2018 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி கீழ் காணும் திட்டப்பணி மேற்கொள்ள 10.05.2018–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள். | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1 | கம்பம் நகராட்சி முகைதீன் ஆண்டவர் புரம் பள்ளி வளாகத்தில் உள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் நகராட்சி நடுநிலைப்பள்ளி கட்டிடங்களுக்கு வர்ணம் பூசுதல், மேற்கூரை பழுதுகள் மற்றும் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளுதல். | 10,00,000/– | ஏ.பி.கன்ஸ்ரக்ஸன்ஸ், ஒப்பந்ததாரர், கம்பம் | – | 0.001 |
| | | | ஆர்.சபிர்அலி, ஒப்பந்ததாரர், கம்பம் | 6.40 | – |

**அலுவலகக் குறிப்பு : – 1)** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட திருவாளர்கள் ஏ.பி.கன்ஸ்ரக்ஸன்ஸ், ஒப்பந்ததாரர், கம்பம் அவர்கள் 0.001 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.1155–9/2017/இ1)

| | |
|---|---|
| 8. | இந்நகராட்சி ஈப்பு பதிவு எண். டி.என். 60 **V** 2194 வாகனத்தில் மின் கலன் பழுதாகி வாகனத்தினை இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே புதிய மின் கலன் மாற்றி மராமத்து பணிகள் செய்திட உத்தேச செலவினம் ரூ.6000/–க்கு (ரூபாய் ஆறு ஆயிரம் மட்டும்) உள்ளூர் விலைப்புள்ளி கோரியத்தில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. |

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | புதிய பேட்டரியின் விலை (பழைய பேட்டரியினை பெற்றுக்கொண்டு) ரூ. |
|---|---|---|
| 1 | விநாயகா பேட்டரிஸ், **431** ஏ, எல்.எப் ரோடு, கம்பம் | 5,900/–<br>(ரூபாய் ஐந்து ஆயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) |
| 2 | பெரியார் பேட்டரி சென்டர், **444–ஏ2**, குமுளி ரோடு, கம்பம் | 5,850/–<br>(ரூபாய் ஐந்து ஆயிரத்து என்னூற்று ஐம்பது மட்டும்) |
| 3 | எக்ஸிட் பேட்டரி கார்னர், **432**, எல்.எப்.ரோடு, கம்பம் | 6000/–<br>(ரூபாய் ஆறு ஆயிரம் மட்டும்) |

<table>
<tr><td></td><td>அலுவலகக் குறிப்பு: 1) உத்தேச செலவினத்திற்கும் மற்றும் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள பெரியார் பேட்டரி சென்டர், 444–ஏ2, குமுளி ரோடு, கம்பம் என்பவரது விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>9.</td><td>இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 1484, நாள்.28.03.2018 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி கீழ் காணும் திட்டப்பணி மேற்கொள்ள 24.05.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்.</th><th>கூடுதல் %</th><th>குறைவு %</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">நகராட்சி வார்டு எண்.25, டி.எஸ்.கே. நகர் மனைப்பிரிவு பூங்கா பகுதியில் onsite Compsing–க்கு கலத்துடள் கட்டிடம் கட்டும் பணி</td><td rowspan="2">2,10,000/–</td><td>வி.கிருஷ்ணன்</td><td>–</td><td>0.04</td></tr>
<tr><td>எல்.இராஜேந்திரன்,</td><td>3.79</td><td>–</td></tr>
</table></td></tr>
<tr><td></td><td>அலுவலகக் குறிப்பு : – 1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட திரு வி.கிருஷ்ணன், ஒப்பந்ததாரர், கம்பம் அவர்கள் 0.04 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.1938/2018/இ1)</td></tr>
<tr><td>10.</td><td>சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் தலைமையில் 17.05.2018 ஆம் தேதிய ஆய்வு கூட்டத்தில் நகராட்சி பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பூங்கா பயன்பாட்டிற்கான இடங்களை பாதுகாப்பு வேலி அமைத்து பாதுகாத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பூங்கா பயன்பாட்டிற்கான 7 இடங்களில் மூன்று எண்ணிக்கையிலான பூங்காகளுக்கு சுற்றுச்சுவர் அமைத்து பாதுகாக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள 4 எண்ணிக்கையிலான பகுதியில் கீழ்காணும் பூங்காவில் சுற்றுசுவர்/ பாதுகாப்பு வேலி அமைத்திடவும், இதற்காக தயார் செய்யப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கும், செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<table>
<tr><th>வ.எண்.</th><th>பூங்கா அமைவிடம்</th><th>மதிப்பீடு தொகை<br>ரூ. இலட்சத்தில்</th></tr>
<tr><td>1</td><td>வார்டு எண்.25, நந்தகோபால்சாமி கோவில் தெரு, டி.எஸ்.கே. மனைபிரிவு (டி.எஸ்.எண்.7/1, வார்டு–டி, பிளாக்–1)</td><td>2.20 இலட்சம்</td></tr>
</table></td></tr>
<tr><td></td><td>அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1938/2018/இ1)</td></tr>
</table>

**11.** சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் தலைமையில் 17.05.2018 ஆம் தேதிய ஆய்வு கூட்டத்தில் நகராட்சி பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பூங்கா பயன்பாட்டிற்கான இடங்களை பாதுகாப்பு வேலி அமைத்து பாதுகாத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பூங்கா பயன்பாட்டிற்கான 7 இடங்களில் மூன்று எண்ணிக்கையிலான பூங்காகளுக்கு சுற்றுச்சுவர் அமைத்து பாதுகாக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள 4 எண்ணிக்கையிலான பகுதியில் கீழ்காணும் பூங்காவில் சுற்றுசுவர்/ பாதுகாப்பு வேலி அமைத்திடவும், இதற்காக தயார் செய்யப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கும், செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பூங்கா அமைவிடம் | மதிப்பீடு தொகை<br>ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.25, நந்தகோபால்சாமி கோவில் தெரு, டி.எஸ்.கே. மனைபிரிவு (டி.எஸ்.எண்.7/1, வார்டு–டி, பிளாக்–1) | 3.00 இலட்சம் |

**அலுவலகக் குறிப்பு**: மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1938/2018/இ1)

**12.** சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் தலைமையில் 17.05.2018 ஆம் தேதிய ஆய்வு கூட்டத்தில் நகராட்சி பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பூங்கா பயன்பாட்டிற்கான இடங்களை பாதுகாப்பு வேலி அமைத்து பாதுகாத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பூங்கா பயன்பாட்டிற்கான 7 இடங்களில் மூன்று எண்ணிக்கையிலான பூங்காகளுக்கு சுற்றுச்சுவர் அமைத்து பாதுகாக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள 4 எண்ணிக்கையிலான பகுதியில் கீழ்காணும் பூங்காவில் சுற்றுசுவர்/ பாதுகாப்பு வேலி அமைத்திடவும், இதற்காக தயார் செய்யப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கும், செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பூங்கா அமைவிடம் | மதிப்பீடு தொகை<br>ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.31, நந்தகோபால் சாமி நகர், (எல்.எப்.ரோடு)<br>(டி.எஸ்.எண்.12/2பி மற்றும் 12/2ஏ, வார்டு–டி, பிளாக்–24) | 2.00 இலட்சம் |

**அலுவலகக் குறிப்பு**: மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**13.** சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் தலைமையில் 17.05.2018 ஆம் தேதிய ஆய்வு கூட்டத்தில் நகராட்சி பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பூங்கா பயன்பாட்டிற்கான இடங்களை பாதுகாப்பு வேலி அமைத்து பாதுகாத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பூங்கா பயன்பாட்டிற்கான 7 இடங்களில் மூன்று எண்ணிக்கையிலான பூங்காகளுக்கு சுற்றுச்சுவர் அமைத்து பாதுகாக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள 4 எண்ணிக்கையிலான பகுதியில் கீழ்காணும் பூங்காவில் சுற்றுசுவர்/ பாதுகாப்பு வேலி அமைத்திடவும், இதற்காக தயார் செய்யப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கும், செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பூங்கா அமைவிடம் | மதிப்பீடு தொகை<br>ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.**31**, நந்தகோபால் சாமி நகர், (எல்.எப்.ரோடு) (டி.எஸ்.எண்.**14**, வார்டு–டி, பிளாக்–**24**) | **4.50** இலட்சம் |

**அலுவலகக் குறிப்பு**: மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1938/2018/இ1)

**14.** சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.**7760/2017**/டபிள்யூபி, **08.05.2018–**ஆம் தேதிய கடிதத்தில் தமிழ்நாடுஅரசு மின் ஆளுமை நிறுவனத்தில், நகராட்சியால் வழங்கப்படும் பிறப்பு/இறப்பு சான்றிதழ்களில், பிறப்பு/இறப்பு பதிவாளர்களின் மின்னனு கையொப்பத்தினை (e-signature) UTIS மென்பொருளில் பதிவு செய்யவும், அதற்கான ஆண்டு பராமரிப்பு கட்டணம் கீழ்காணும் விபரப்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| Sl.No. | Description | CDAC Amount Rs. | (n) Code solutions Amount Rs. |
|---|---|---|---|
| 1) | Rate quoted for per user per e-sign transaction using Aadhaar based Biometric authentication or OTP Authentication. | 2 | 5 |
| 2) | Rate quoted for 10 numbers of documents permissible in a single e-signing transaction aadhaar based Biometric Authentication or OTP authentication | 6 | 6 |
| 3) | Rate quoted for one Aadhaar user for unlimited e-sign transaction per annum | 500 | 700 |
| 4) | Onsite support trainer charge per day | 4000 | 4000 |

<table>
<tr><td></td><td>
<table><tr><td></td><td>(9 hours)</td><td></td><td></td></tr></table>

இதனடிப்படையில் கம்பம் நகராட்சியில் மூன்று பிறப்பு/இறப்பு பதிவாளர்களின் ஆதார் எண் அடிப்படையில் ஒருவருக்கு ரூ.1200/—வீதம்(ரூ.500+ரூ.700) மூன்று நபருக்கு ரூ.3600/— ம் பயிற்சியாளர் கட்டணம் ரூ.8000/—ம்(ரூ.4000+ரூ.4000) GST மற்றும் சேவை வரி 2.5% அரசு கணக்கில் செலுத்தவும், உத்தேச செலவினத் தொகை ரூ.15,000/—ஐ (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
</td></tr>
<tr><td></td><td>அலுவலகக்குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1173/2017/எச்1)</td></tr>
<tr><td>15.</td><td>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்குச் சொந்தமான கழிவு நீர் ஊர்தி வாகனம் TN 60 Z 3591-க்கு ஏர் கம்பரஷர் வால்வு பழுதாகிவிட்டது. எனவே மேற்படி பழுதினை சரிசெய்வதற்கு ஆகும் உத்தேச செலவீனத் தொகைரூ.5,000/-ஐ (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) மன்றத்தின்அனுமதிக்குவைக்கப்படுகிறது.</td></tr>
<tr><td></td><td>அலுவலகக்குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோருவதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1639/2018/எச்1)</td></tr>
<tr><td>16.</td><td>இந்நகராட்சிக்குச் சொந்தமான டம்பர் பிளேசர் வாகனம் TN 60 T 4504-டம்பர் பிளேசர் லாரிக்கு ரேடியேட்டர் பழுதினை சரிசெய்வதற்கு 03.05.2018—ஆம் நாள் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி</th><th>விலை விகிதம்<br>ரூ.</th></tr>
<tr><td>1</td><td>திரு பி.முருகன்,<br>ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல்ஸ்,<br>நகராட்சி அலுவலகம் முன்பு,<br>கம்பம்.</td><td>4,950</td></tr>
<tr><td>2</td><td>திரு எஸ்.முருகன்,<br>ஸ்ரீ சாய்ராம் ஸ்பிரே பெயிண்டிங் ஒர்க்ஸ்<br>கம்பம்.</td><td>5,950</td></tr>
</table>
</td></tr>
<tr><td></td><td>அலுவலகக் குறிப்பு: வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு பி.முருகன், ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல்ஸ், கம்பத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1589/2018/எச்1)</td></tr>
</table>

| | |
|---|---|
| **17.** | இந்நகராட்சிக்குச் சொந்தமான டம்பர் பிளேசர் வாகனம் TN 60 Z 3591- கழிவு நீர் ஊர்தி வாகனத்திற்கு ஏர் கம்பரஸர் வால்வு பம்ப் பழுதினை சரிசெய்வதற்கு 18.05.2018-ஆம் நாள் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. |

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் ரூ. |
|---|---|---|
| 1 | திரு பி.முருகன்,<br>ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல்ஸ்,<br>நகராட்சி அலுவலகம் முன்பு,<br>கம்பம். | 4,900 |
| 2 | திரு எஸ்.முருகன்<br>ஸ்ரீ சாய்ராம் ஸ்பிரே பெயிண்டிங் ஒர்க்ஸ்,<br>CMS நகர்,<br>அரசு மருத்துவமனை எதிர்புறம்,<br>கம்பம். | 5,500 |

**அலுவலகக் குறிப்பு:** வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு பி.முருகன், ஸ்ரீ முருகன் திரு பி.முருகன், ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல்ஸ், கம்பத்தின் விலைப்புள்ளியை கருதி தனி மன்றம் அனுமதிக்கலாம். அவசர, அவசியம் அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க.எண்.1639/2018/எச்1)**

| | |
|---|---|
| **18.** | கம்பம் நகராட்சி பகுதிகளில் தினமும் உருவாகும் கழிவுகளை அந்தந்த பிரிவு பகுதிகளில் அளவீடு செய்வதற்கு 3 எண்ணம் எடை இயந்திரம் (Weighing Machine) வாங்குவதற்கு **21.05.2018–**ஆம் நாள் வரப்பெற்ற கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. |

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | எடை இயந்திரம் ஒன்றின் விலை ரூ. |
|---|---|---|
| 1 | திரு ஜி.உதயக்குமார்<br>மதியழகன் ஸ்டோர்,<br>1,மதுரை ரோடு,<br>தேனி – 625 531. | 7,100 |
| 2. | திரு டி.ரமேஷ்,<br>காந்திமதி டிரேடர்ஸ்,<br>எண்.21 பழைய பாப்பு ராஜா சந்து,<br>எடமால் தெரு,<br>தேனி. | 7,450 |

| | | | |
|---|---|---|---|
| | 3. | திரு காளிதாஸ்,<br>எம்.எஸ்.ஹார்டுவேர்ஸ்,<br>919,பெரியகுளம் ரோடு,<br>தேனி . | 7,600/- |
| | **அலுவலகக் குறிப்பு:** வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு ஜி.உதயக்குமார் மதியழகன் ஸ்டோர், தேனி விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.3136/2017/எச்1) | | |
| **19.** | சென்னை,உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு எண். W.A.(MD) No. 826 of 2017 மற்றும் C.M.P.(MD) No.5690 of 2017–ன் மீதான **23.06.2017** ஆம் தேதிய தீர்ப்பின் மீது, சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டுதலின்படி உச்சநீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி விண்ணப்பம் **14.05.2018** –ஆம் நாள் அரசு வழக்கறிஞர் மூலம் தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி தீர்ப்பாணைக்கு தடையுத்தரவு பெறப்பட்டுள்ளது மேற்படி வழக்கினை திரு ஐ.கணேசன். அரசு வழக்கறிஞர் வசம் ஒப்படைத்து நடத்திடத்தியமைக்கு செலவுத் தொகை ரூ.1,00,000/–மும், மற்றும் மேற்படி வழக்கினை முதுநிலை வழக்கறிஞர் (Senior Advocate) வசம் ஒப்படைத்து தடையுத்தரவு பெறப்பட்டமைக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.3,00,000/–ஐ ஆக மொத்தம் ரூ.4,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கலாம். | | |
| | **அலுவலகக்குறிப்பு**: 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)அவசர அவசியம் கருதி மேற்படி வழக்கறிஞருக்கு வழக்கு கட்டணம் ரூ.4,00,000/–ம் வழங்குவதை மன்றம் அனுமதிக்கலாம். | | |
| **20.** | கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனம் TN 60 T 4507 டம்பர் பிளேசர் லாரிக்கு **15.06.2018** உடன் தகுதிச்சான்று முடிவடைவதால், மராமத்து பணிகள் செய்து புதிதாக தகுதிச்சான்று பெறுவதற்கு உத்தேச செலவினம் ரூ.98,000/–ஐ (ரூபாய் தொண்ணூற்றி எட்டாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | | |
| | **அலுவலகக்குறிப்பு:** 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)** அவசர அவசியதும் கருதி ஆணையாளர் மற்றும் தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று தகுதிச்சான்று பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம். | | |
| **21.** | சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் தலைமையில் 17.05.2018 ஆம் தேதிய திடக்கழிவு மேலாண்மை குறித்த ஆய்வு கூட்ட நடவடிக்கைகளில் நகராட்சிப் பகுதியில் பழுதடைந்த கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தும் பொழுது கட்டிடத்தின் உறுதி தன்மை நன்றாக இருந்தால் அவ்வாறான கட்டிடங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர்செய்து குழந்தைகள் விளையாட்டு பூங்கா / படிப்பகம்/நகராட்சிக்கு தேவையான பொருட்களை வைப்பறை போன்ற வசதிகளை ஏற்படுத்தி கட்டிடங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிக்கு முகைதீன் ஆண்டவர் புரம் நகராட்சி பள்ளி வளாகத்தில் பழுதடைந்த கழிப்பறை | | |

| | |
|---|---|
| | கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்த மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக செயற் பொறியாளர் அவர்களின் அனுமதி அளித்தன் படி கழிப்பிட கட்டிடத்தினை ஒரு பகுதி கட்டிடத்தின் சுற்றுசுவர் நல்ல நிலையில் இருப்பதால் சேதமடைந்த பகுதியினை இடித்துவிட்டு, இரும்பு குழாயினால் ஆன மேற்கூரை, குடிநீர் வசதி, மின் வசதி மற்றும் தடைதளம் அமைத்து நகராட்சி நடுநிலைப் பள்ளி(சுங்கம்)க்கு படிப்பகமாக மாற்றி அமைத்திடவும், இதற்காக தயார் செய்யப்பட்டுள்ள ரூ.5,00,000/–க்கான (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) திட்ட மதிப்பீட்டிற்கும், மேற்கண்ட பணியினை கல்விநிதியின் கீழ் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு**: 1) மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1938–8/2018/இ1)<br>2) மேற்படி பணிகள் கல்விநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| **22.** | சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் தலைமையில் 17.05.2018 ஆம் தேதிய திடக்கழிவு மேலாண்மை குறித்த ஆய்வு கூட்ட நடவடிக்கைகளில் நகராட்சிப் பகுதியில் உள்ள சேகரம் செய்யப்படும் மக்கும் குப்பைகளை அப்பகுதியிலேயே உரிமாக்குவதற்கு ஏதுவாக நகராட்சிக்க சொந்தமான பூங்கா பகுதியில் Onsite Composting செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட வார்டு எண்.25, நந்தகோபால்சாமி கோவில் தெரு, டி.எஸ்.கே. மனைபிரிவு அமையப்பெற்ற பூங்கா மேற்கு பகுதியில் Onsite Composting அமைத்திடவும், இதற்காக தயார் செய்யப்பட்டுள்ள ரூ.2,10,000/–க்கான (ரூபாய் இரண்டு இலட்சத்து பத்து ஆயிரம் மட்டும்) திட்ட மதிப்பீட்டிற்கும், செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1938–6/2018/இ1) |
| **23.** | சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் தலைமையில் 17.05.2018 ஆம் தேதிய திடக்கழிவு மேலாண்மை குறித்த ஆய்வு கூட்ட நடவடிக்கைகளில் நகராட்சிப் பகுதியில் உள்ள சேகரம் செய்யப்படும் மக்கும் குப்பைகளை அப்பகுதியிலேயே உரிமாக்குவதற்கு ஏதுவாக நகராட்சிக்க சொந்தமான பூங்கா பகுதியில் Onsite Composting செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட வார்டு எண்.25, நந்தகோபால்சாமி கோவில் தெரு, டி.எஸ்.கே. மனைபிரிவு அமையப்பெற்ற பூங்கா கிழக்கு பகுதியில் Onsite Composting அமைத்திடவும், இதற்காக தயார் செய்யப்பட்டுள்ள ரூ.2,10,000/–க்கான (ரூபாய் இரண்டு இலட்சத்து பத்து ஆயிரம் மட்டும்) திட்ட மதிப்பீட்டிற்கும், செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1938–5/2018/இ1) |

| | |
|---|---|
| **24.** | சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் தலைமையில் 17.05.2018 ஆம் தேதிய திடக்கழிவு மேலாண்மை குறித்த ஆய்வு கூட்ட நடவடிக்கைகளில் நகராட்சிப் பகுதியில் உள்ள சேகரம் செய்யப்படும் மக்கும் குப்பைகளை அப்பகுதியிலேயே உரிமாக்குவதற்கு ஏதுவாக நகராட்சிக்க சொந்தமான பூங்கா பகுதியில் Onsite Composting செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிக்கு முகைதீன் ஆண்டவர் புரம் நகராட்சி பள்ளி வளாகத்தில் தினசரி சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகளை Onsite Composting செய்திட ஏதுவாக சிமெண்ட் தளம், தொட்டி மற்றும் மேற்கூரை அமைத்திடவும், இதற்காக தயார் செய்யப்பட்டுள்ள ரூ.2,10,000/—க்கான (ரூபாய் இரண்டு இலட்சத்து பத்து ஆயிரம் மட்டும்) திட்ட மதிப்பீட்டிற்கும், செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு**: 1) மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.1938—7/2018/இ1)**<br>**2)**மேற்படி பணிகள் கல்விநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |

**ஒப்பம்/— திரு ந.சங்கரன்,**
**ஆணையாளர் மற்றும் தனிஅதிகாரி,**
**கம்பம் நகராட்சி.**

**நாள். 30.05.2018**
**இடம். கம்பம்**